# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C. 115/2024**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 19.09.2024**

| | |
|---|---|
| **Name : நவநீத கிருஷ்ணன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் கருமலைக்கூடலில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். கடந்த 2023 ஆம் வருடம் மாலை நேரத்தில் கமலா பள்ளி அருகே அ.சா.1 நடந்து சென்ற போது அடையாளம் தெரியாத நபர் அவரை தள்ளிவிட்டதாக சொன்னார்கள். வேறொன்றும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

2) கடந்த 13.10.2023 ஆம் தேதி மாலை 6.30 மணிக்கு அ.சா.1 அவரது மாமனார் வீட்டிற்கு செல்ல வேண்டி கமலா பள்ளி அருகே சாலையில் நடந்து சென்ற போது எதிரி அவரை கெட்டவார்த்தையால் பேசினாரா என்றால் இல்லை. அ.சா.1 அண்ணன் அலெக்ஸ் ஓட்டுநர் வேலை செய்ததற்கு நீ ஏன் தடுக்கிறாய் என்று திட்டினார் என்றால் இல்லை. பிறகு எதிரி கீழே கிரிக்கெட் கிடந்த ஸ்டெம்பை

எடுத்து அ.சா.1 வலது கை, மற்றும் வலது பக்க மண்டையில் அடித்தார் என்றால் இல்லை. சம்பவத்தை நேரில் பார்த்துவிட்டு தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

**ஓம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 115/2024**

**Prosecution witness : அ.சா. 3** **Date : 19.09.2024**

| | |
|---|---|
| **Name : அருள்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பாரதி நகர் சேலம் கேம்ப்பில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்கிறேன். கடந்த 2023 ஆம் வருடம் மாலை நேரத்தில் கமலா பள்ளி அருகே அ.சா.1 நடந்து சென்ற போது அடையாளம் தெரியாத நபர் அவரை தள்ளிவிட்டதாக சொன்னார்கள். வேறொன்றும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.2** ஆகும். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) கடந்த 13.10.2023 ஆம் தேதி மாலை 6.30 மணிக்கு அ.சா.1 அவரது மாமனார் வீட்டிற்கு செல்ல வேண்டி கமலா பள்ளி அருகே சாலையில் நடந்து சென்ற

போது எதிரி அவரை கெட்டவார்த்தையால் பேசினாரா என்றால் இல்லை. அ.சா.1 அண்ணன் அலெக்ஸ் ஓட்டுநர் வேலை செய்ததற்கு நீ ஏன் தடுக்கிறாய் என்று திட்டினார் என்றால் இல்லை. பிறகு எதிரி கீழே கிரிக்கெட் கிடந்த ஸ்டெம்பை எடுத்து அ.சா.1 வலது கை, மற்றும் வலது பக்க மண்டையில் அடித்தார் என்றால் இல்லை.

3) கடந்த 14.10.2023 ம் தேதி மாலை 06.30 மணிக்கு நான் மற்றும் வினோத்குமார் இருவரும் நின்று கொண்டு இருந்த போது காவல் துறையினர் வரைந்த வரைபடத்திற்கு மகஜர் சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியாக கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை,

4) சம்பவ இடமான கமலாகள்ளி அருகே வரைந்த வரைபடத்திற்கு சாட்சியாக இருந்து விட்டு தற்போது எதிரியை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

**ஓம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 115/2024**

**Prosecution witness : அ.சா. 4** **Date : 19.09.2024**

| Name : வினோத்குமார் | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பாரதி நகர் சேலம் கேம்ப்பில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்கிறேன். கடந்த 2023 ஆம் வருடம் மாலை நேரத்தில் கமலா பள்ளி அருகே அ.சா.1 நடந்து சென்ற போது அடையாளம் தெரியாத நபர் அவரை தள்ளிவிட்டதாக சொன்னார்கள். வேறொன்றும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.3** ஆகும். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை—**

2) கடந்த 13.10.2023 ஆம் தேதி மாலை 6.30 மணிக்கு அ.சா.1 அவரது மாமனார் வீட்டிற்கு செல்ல வேண்டி கமலா பள்ளி அருகே சாலையில் நடந்து சென்ற போது எதிரி அவரை கெட்டவார்த்தையால் பேசினாரா என்றால் இல்லை. அ.சா.1

அண்ணன் அலெக்ஸ் ஓட்டுநர் வேலை செய்ததற்கு நீ ஏன் தடுக்கிறாய் என்று திட்டினார் என்றால் இல்லை. பிறகு எதிரி கீழே கிரிக்கெட் கிடந்த ஸ்டெம்பை எடுத்து அ.சா.1 வலது கை, மற்றும் வலது பக்க மண்டையில் அடித்தார் என்றால் இல்லை.

3) கடந்த 14.10.2023 ம் தேதி மாலை 06.30 மணிக்கு நான் மற்றும் அருள் இருவரும் நின்று கொண்டு இருந்த போது காவல் துறையினர் வரைந்த வரைபடத்திற்கு மகஜர் சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியாக கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை,

4) சம்பவ இடமான கமலாகள்ளி அருகே வரைந்த வரைபடத்திற்கு சாட்சியாக இருந்து விட்டு தற்போது எதிரியை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

ஓம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 115/2024**

**Prosecution witness : அ.சா. 5** **Date : 19.09.2024**

| | |
|---|---|
| **Name : சேகர்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

**முதல் விசாரணை**

1) நான் தற்போது கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் புலன் ஆய்வு செய்த புலனாய்வு அதிகாரி திரு.சபாபதி, காவல் உதவி ஆய்வாளர் தக்க சமயத்தில் சாட்சியம் அளிக்க இயலாத காரணத்தால் அவர் சார்பாக ஆவணத்தின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 13.10.2023 –ம் தேதி கருமலைக்கூடல் காவல்நிலையத்தில் திரு.சபாபதி, காவல் உதவி ஆய்வாளர் நிலையப் பொறுப்பில் இருந்த போது, மேட்டூர் அரசு மருத்துவமனையில் இருந்தது கிடைக்கப் பெற்ற காயத்தகவலின் பேரில் மேற்படி மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த ஜெயபிரகாஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப **நி.கு.எண்.307/2023 u/Sec. 294(பி), 324 IPC** ஆக வழக்கு பதிவு செய்தார். புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.4** முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ 5** ஆகும். இதன் அசல் புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கையை இதர நகல்களை புலனாய்வு அதிகாரி வசம் ஒப்படைத்தார்.

3. பிறகு புலன் விசாரணை அதிகாரி திரு.சபாபதி, காவல் உதவி ஆய்வாளர் புலன் விசாரணை நகலை எடுத்துக்கொண்டு கடந்த 14.10.2023 ம் தேதி மாலை 06.30 மணிக்கு சம்பவ இடம் கமலா பள்ளி அருகே சென்று சாட்சிகள் அருள் மற்றும்

வினோத்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார். பார்வை மகஜர் மற்றும் வரைபடம் **அ.சா.ஆ 6** மற்றும் **அ.சா.ஆ 7** ஆகும்.

4. பின்பு சாட்சிகள் ஜெயபிரகாஷ், நவநீதகிருஷ்ணன், அருள், வினோர்குமார், செங்குட்வேல், சீனிவாசன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். இவ்வழக்கில் காயமடைந்த ஜெயபிரகாஷ் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சீனிவாசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேடு பெற்றார். விபத்து பதிவேடு **அ.சா.ஆ.8 ஆகும்.**

5. இவ்வழக்கின் எதிரி கடந்த 14.10.2023 ம் தேதி கைது செய்யப்பட்டு நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டார்.

6. இவ்வழக்கின் புலன் விசாரணையில் எதிரிகள் மீதான குற்றம் உண்மை எனத் தெரிய வந்ததால் எதிரி மீது கடந்த 22.11.2023 ம் தேதி **நி.கு.எண்.307/2023 u/Sec. 294(பி), 324 IPC** ல் இருந்து **u/Sec. 294(பி), 326 IPC** ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தார். சட்டபிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.9** ஆகும்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>.

7. நான் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் சம்வம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. புள்ளி விவர கணக்குக்காக போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. புலன் விசாரணை ஒரு தலைபட்சமானது என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஓம்/- தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**